Y.M.C.A.

Registered as a Newspaper | பக்கங்கள் 04 | விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | மக்கள் தினசரி | Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | புரட்டாதி 03 | [19-09-1993] | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 218

## க. பொ. த. (உ/த) பரீட்சையில் ஆங்கிலம் கட்டாயமாக்க முடிவு

க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கான பாடங்களில் மாற்றங்கள் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு கல்வி உயர்கல்வி அமைச்சர் லொக்குபண்டார பணிப்புரை விடுத்துள்ளார். இந்தப் புதிய மாற்றத்தின்படி தற்போது இப்பரீட்சைக்குள்ள நான்கு பாடங்கள் மூன்றாகக் குறைக்கப்பட இருப்பதுடன் நான்காவது பாடமாக ஆங்கிலம் உட்புகுத்தப்படவுள்ளது. ஆங்கில மொழியை மாணவர்கள் கற்பதை உறுதி செய்யவும், வெளிநாடுகளில் கூட உயர்கல்வியைப் பெறவும், தொழில்வாய்ப்பை பெறவும் கூடிய வகையில் இந்த மாற்றம் செய்யப்பட இருக்கிறது. தேசிய பாடசாலைகளின் அதிபர்களோடு அண்மையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளையடுத்து இம் முடிவு மேற்கொள்ளப்பட்டதாக கல்வி உயர்கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# 15,000 தமிழ் இளைஞர், யுவதிகள் கொழும்பில் கைதான தாகக் கணிப்பீடு!

## கிளாலி-பூநகரி படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## தாக்குதல்

காரைநகர் சுருவில் ஈ.பீச், தாம்பிலிப்பிட்டி பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் நேற்று காலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தேடுதல்கள் தொடர்கின்றதாம்

(கொழும்பு)

கொழும்பில் தமிழ் இளைஞர்கள், பெண்கள், தமிழ் உயர் அதிகாரிகள் உட்பட இது வரை பதினையாயிரம் பேர்வரை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கொழும்பு நகரிலும் அதன் புற நகர்ப் பகுதிகளிலும் தேடுதல் நடாத்தும் பொலிசார் அப்பகுதிகளில் உள்ள தமிழ் இளைஞர் யுவதிகளை தொடர்ந்தும் கைது செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கைதுகள் குறித்து ஆட்சேபம் தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவையும் சந்தித்து விளக்கமளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்துசிறிலங்காபாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்காவிடம் ராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி பின்வரும் வேண்டுகோள்களை விடுத்துள்ளார்.

∴ அடையாள அட்டை இல்லை என்பதற்காக எவரும் கைது செய்யப்படக் கூடாது.

∴ கைது செய்யப்படுவோரின் உறவினர்கள், தொழில் வழங்குநர் வந்து அடையாளம் காட்டின் அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும்.

∴ தொழில்புரியும் அடையாள அட்டை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

∴ மொட்டைக் கடிதங்களை வைத்து ஒருவரை விசாரணையின்றி கைது செய்யக்கூடாது.

∴ கைது செய்யப்படுவோர் 24மணி நேரத்திற்குள் விடுவிக்கப்படவேண்டும்.

## கொழும்பு தடுப்புமுகாங்களில் 1008 தமிழ் இளைஞர்கள்

(கொழும்பு)

தற்பொழுது தென்பகுதியில் ஆயிரத்து எட்டு தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் வடக்கு கிழக்கு பகுதிகளிலிருந்து இக்கைதிகளின் விபரங்கள் வந்து சேராமையினால் இவர்களின் விடுதலை தாமதமாகியுள்ளது என்றும் தடுப்புக் காவலில் உள்ளோர் பற்றி விசாரிப்பதற்கென நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் டி. ஜி. ஜெயலத் தெரிவித்துள்ளார்.

தற்போது 1008 தமிழ் இளைஞர்கள் தென்பகுதியில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து விசாரணைகள் பூர்த்தியடைந்தால் விசாரணைக் குழுவின் வேலைகளை முடித்து விடும் என அவர் தெரிவித்துள்ளார்.

இக்கமிட்டியின் வேலைகள் தாமதிக்கப்பட்டதற்கு கமிட்டி பொறுப்பில்லை என்றும் நீதி மன்றம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதும் சட்டமா அதிபர் அலுவலகமும், பாதுகாப்பு அமைச்சும் மேற்கொண்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கண்டி நகர் பகுதியில் சுற்றிவளைப்பு;சோதனை

(கண்டி)

கண்டி நகரில் கடந்த 15ம் திகதி திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதுடன் பிரதான நுழைவாயில்களில் வாகனங்கள் நிறுத்தப்பட்டு அதில் பயணம் செய்தவர்கள் பொலிஸாரினால் சோதனைக்கை நடைபெற்றுள்ளது. வாகனங்களில் இருந்து பயணிகள் இறக்கப்பட்டு அவர்களது அடையாளஅட்டைகள்,பொதிகள் பரிசோதிக்கப்பட்ட பின்னரே வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டன.

கண்டி நகருக்கு பிரதான

## திலீபன் நினைவு நிகழ்வுகள் வெகுசன அமைப்புகள் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் தியாகமரணமடைந்த தியாகி லெப். கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நிறைவு நினைவு நாட்களை யொட்டி யாழ் குடாநாடெங்கும் எழுச்சிக்கோலம் பூண்டுள்ளது.

எழுச்சிக் கோலம் பூண்டிருக்கும் குடா நாட்டில் தினசரி தொடர்ச்சியான பல அஞ்சலி நிகழ்ச்சிகள் மிகவும் உணர்வு பூர்வமாக நடைபெற்று வருகின்றன.

அடையாளஉண்ணாவிரதங்கள், சிரமதானப் பணிகள், தெருக்கூத்துக்கள், கரகாட்டம், கண்காட்சிகள், ஊர்திபவனிகள் என்று பல்வேறு வகையிலும் தியாகி திலீபனை நினைவுகூரும் வகையிலும் அஞ்சலி செலுத்தும் வகையிலும் உணர்வு பூர்வமான அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறான அஞ்சலி நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்

(3ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபன் நினைவு உண்ணாவிரதம், சிரமதானம்

தியாகி லெப். கேணல் திலீபனின் ஆறாவது ஆண்டு நினைவாக வட்டாரீதியாக மேற்கொள்ளப்பட்டுவரும் அடையாள உண்ணாவிரத நிகழ்வுகள் நாளை பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளன.

சங்கானை வட்டம், சங்கானை அரசடி வைரவர் கோவில்முன்றல், வட்டுக்கோட்டை சிற்றூர் மக்கள்; கோப்பாய் வட்டம் நீர்வேலி வாய்க்காற்தரவை பிள்ளையார் கோயில், கோப்பாய் சிற்றூர் மக்கள்; சண்டிலிப்பாய் வட்டம், ஆனைக்

[4ஆம் பக்கம் பார்க்க]

## தமிழ்த் தேசியமே புலிகளின் ஊக்க சக்தியாகும்

எம். எஸ். செல்லச்சாமி ஜனாதிபதி டி. பி. விஜேதுங்

இதுகுறித்துசிறீலங்காபாது காப்பு அமைச்சின் செயலா

களை விடுத்துள்ளார்.

∴ அடையாள அட்டை இல்லை என்பதற்காக எவரும் கைது செய்யப்படக் கூடாது.

∴ கைது செய்யப்படுவோரின் உறவினர்கள், தொழில் வழங்குநர் வந்து அடையாளம் காட்டின் அவர்கள் விடுவிக்கப்பட

யான அட்டை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

∴ மொட்டைக் கடிதங்களை வைத்து ஒருவரை விசாரணையின்றி கைது செய்யக்கூடாது.

∴ கைது செய்யப்படுவோர் 24மணி நேரத்திற்குள் விடுவிக்கப்படவேண்டும்.

# கொழும்பு தடுப்புமுகாம்களில் 1008 தமிழ் இளைஞர்கள்

(கொழும்பு)

தற்பொழுது தென்பகுதியில் ஆயிரத்து எட்டு தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் வடக்கு கிழக்கு பகுதிகளிலிருந்த இக்கைதிகளின் விபரங்கள் வந்து சேராமையினால் இவர்களின் விடுதலை தாமதமாகியுள்ளது என்றும் தடுப்புக் காவலில் உள்ளோர் பற்றி விசாரிப்பதற்கென நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் டி. ஜி. ஜெயலத் தெரிவித்துள்ளார்.

தற்போது 1008 தமிழ் இளைஞர்கள் தென்பகுதியில தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து விசாரணைகள் பூர்த்தியடைந்தால் விசாரணைக் குழு தனது வேலையை முடித்துவிடும் என அவர் தெரிவித்துள்ளார்.

இக்கமிட்டியின் வேலைகள் தாமதிக்கப்பட்டதற்கு கமிட்டி பொறுப்பில்லை என்றும் நீதி மற்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதும் சட்டமா அதிபர் அலுவலகமும், பாதுகாப்பு அமைச்சும் மேற்கொண்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கண்டி நகர் பகுதியில் சுற்றிவளைப்பு;சோதனை

(கண்டி)

கண்டி நகரில் கடந்த 15ம் திகதி திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதுடன் பிரதான நுழைவாயில்களில் வாகனங்கள் நிறுத்தப்பட்டு அதில் பயணம் செய்தவர்கள் பொலிஸாரினால் சோதனையிடப்பட்டுள்ளனர்.

அதிகாலை முதல் இரவு வரை இத் தேடுதல் நடவடிக்கை நடைபெற்றுள்ளது. வாகனங்களில் இருந்து பயணிகள் இறக்கப்பட்டு அவர்களது அடையாளஅட்டைகள்,பொதிகள் பரிசோதிக்கப்பட்ட பின்னரே வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டன.

கண்டி நகருக்கு பிரதான நுழைவாயில்கள் அனைத்திலும் திடீர் சோதனை நடைபெற்றது என தெரியவருகின்றது.

நாடெங்கும் எழுச்சிக்கோலம் பூண்டுள்ளது.

எழுச்சிக் கோலம் பூண்டிருக்கும் குடா நாட்டில் தினசரி தொடர்ச்சியான பல அஞ்சலி நிகழ்ச்சிகள் மிகவும் உணர்வு பூர்வமாக நடைபெற்று வருகின்றன.

அடையாள உண்ணாவிரதங்கள், சிரமதானப் பணிகள், தெருக்கூத்துக்கள், கரகாட்டம், கண்காட்சிகள், ஊர்தி

# தியாகி திலீபன் நினைவு உண்ணாவிரதம், சிரமதானம்

தியாகி லெப். கேணல் திலீபனின் ஆறாவது ஆண்டு நினைவாக வட்டாரீதியாக மேற்கொள்ளப்பட்டுவரும் அடையாள உண்ணாவிரத நிகழ்வுகள் நாளை பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளன.

சங்கானை வட்டம், சங்கானை அரசடி வைரவர் கோவில்முன்றல், வட்டுக்கோட்டை இற்றூர் மக்கள்; கோப்பாய் வட்டம் நீர்வேலி வாய்க்காற்தரவை பிள்ளையார் கோயில், கோப்பாய் இற்றூர் மக்கள்; சண்டிலிப்பாய் வட்டம், ஆனைக்

[4ஆம் பக்கம் பார்க்க]

# தமிழ்த் தேசியமே புலிகளின் ஊக்க சக்தியாகும்

## அற்றியன் விஜயமன்ன

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியமே தமிழீழ விடுதலைப்புலிகளின் நெஞ்சங்களில் கனன்றுகொண்டிருக்கும் விடுதலை சுவாலையின் ஊக்க சக்தியாகும் என்று'பிராப்தா' என்ற பத்திரிகையில் அற்றியன் விஜயமன்ன என்பவர் எழுதிய கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அக் கட்டுரையில் ஒரு தேசிய விடுதலைக்கான கெரில்லாப் போராட்டமானது தமது நாட்டை நிறுவிக்கொள்ளாது ஒருபோதும் முற்றுப்பெற்றது கிடையாது.

விடுதலைப்புலிகள் ஒரு தோற்கடிக்கப்பட்ட படை அல்ல அவர்கள் இந்தியா, சிறிலங்கா ஆகிய இரு நாட்டுப்படைகளுடனும் பொருதி பலமான நிலையிலேயே உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத்தீவின் கரையில் மூன்றில் ஒரு பகுதியையும்

[3ஆம் பக்கம் பார்க்க]

# புறக்கோட்டைப் பகுதியில் நூற்றுக்கணக்கானோர் கைது

(கொழும்பு)

புறக்கோட்டைப் பகுதியில் விடுகள், மற்றும் வர்த்தக நிலையங்களில் கடந்த 14-ம் திகதி நள்ளிரவு நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போது நூற்றுக்கணக்கான தமிழர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 120 பேர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் இவர்களில் 20 பேர் புலிகளுடன் நேரடியாக தொடர்புடையவர்கள் எனவும் ஏனையோர் மறைமுகமான தொடர்பு உடையவர்கள் எனவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியை மேற்கோள் காட்டி 'திவயின' செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்கள் புறக்கோட்டை மணிக்கூட்டுக் கோபுரம் அருகே கைது செய்யப்பட்ட இரு இளைஞர்மூலம் அடையா

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# கடல் தடைப் பிரகடனத்தில் சிறிலங்கா அரசு உறுதி

## இந்திய மீனவர் கச்சதீவில் மீன் பிடிக்க அனுமதி

இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளின் கடற்பரப்பில் எந்த ஒரு படகும் அல்லது கப்பல் எதுவும் அனுமதியின்றிப் பயணம் செய்வதற்கோ அல்லது எந்த ஒரு நோக்கத்திற்காகவும் தரித்து வைக்கப்பட்டிருப்பதற்கோ அனுமதிக்கப்படமாட்டாது என்று சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.

சிறிலங்கா அரசின் சார்பில் வெளியுறவு அமைச்சினால் நேற்றுமுன்தினம் கொழும்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும், சர்வதேச சட்டவிதிகளுக்கு அமைவாகவே இந்தப் பிரகடனம் விடுக்கப்பட்டிருப்பதாகவும், இந்தியா தெரிவித்த யோசனையை அரசாங்கம் கவனத்தில்கொண்டு இந்திய-இலங்கை எல்லை உடன்படிக்கையின் கீழ் இந்தியமீனவர்களுக்கு கச்சதீவு செல்வதற்கான உரிமைமட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் மோசமான பாதுகாப்பு நிலைமைகளைக் கருத்திற் கொண்டே அரசாங்கம் இந்தப் பிரகடனத்தை விடுத்திருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையின் வடக்கே கச்சதீவுப் பகுதியில் நீர்ப்பரப்பின் மீது படகுப் போக்குவரத்திற்கு விதிக்கப்

( 3 ஆம் பக்கம் பார்க்க )

# புலிகளின் தாக்குதலுக்கு ஒருசிப்பாய் பலி; மூவர் காயம்

(அம்பாறை)

அம்பாறையில் ரோந்து சென்று கொண்டிருந்த அதிரடிப் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதுடன் மூவர் காயமடைந்துள்ளனர்.

எக்கலோயாவில்மேற்படிசம்பவம் இடம் பெற்றதாக சிறிலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

# யாழ்.நகரில் வாந்திபேதி இருவர் பலி; 8 பேர் பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பிய அகதிகள் இருவர் வாந்திபேதி நோய்க்கிலக்காகி மரணமடைந்துள்ளார்கள். இதேவேளை இறந்தவருள் ஒருவரின் மரணச்சடங்கில் கலந்துகொண்ட எட்டுப்பேர் இந்நோய்க்கிலக்காகி சிகிச்சைக்காகயாழ் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இறந்தவருள் ஒருவரான சின்னத்தம்பி தையலம்மை [வயது 98] என்பவர் இந்தியாவுக்கு அகதியாக சென்று அங்கிருந்து நாடு திரும்பியவரென தெரியவருகின்றது. இந்நோய் தொற்றியுள்ள எட்டுப்பேரில் முதலில் இறந்தவரின் மகனுக்கே இந்நோய் தொற்றியதாகவும் அவர் தாயாரின் ஈமச்சடங்கை முடித்தபின் மருத்துவமனைக்கு செல்லலாம் என எண்ணி இரண்டு நாள்கள் தனியார் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றதாகவும் தெரியவருகின்றது.

மேற்படி இறந்தவர் வயிற்றோட்ட நோயினாலேயே இறந்தார் என முன்னர் நம்பப்பட்டதாகவும் பின் ஈமச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டு சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டபின் அவர்களுக்கு வாந்திபேதி நோய்க்கான அறிகுறிகள் இருப்பதாக அறியப்பட்டதை அடுத்து இறந்தவர் இந்நோய்க்கிலக்காகி இறந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது

தற்போது இந்நோய்க்கிலக்காகி யாழ். போதனா மருத்துவ மனையில் சிகிச்சைபெற்று வரும் பெண் நோயாளிகளுக்கு

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# கொலரா பரவும் அபாயம்; வைத்திய அதிகாரி அறிவிப்பு

கடந்த நாலு நாட்களில் யாழ்ப்பாண மாநகரசபை உட்பட குடா நாட்டிலிருந்து எட்டு கடுமையான வயிற்றோட்ட நோயாளர் இனங் காணப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் உயிரிழந்துள்ளனர் என சுகாதார வைத்திய அதிகாரியின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது. தற்போதுள்ள சூழ்நிலையில் தென்னாசிய நாடுகளில் மீண்டும் கொலரா 0139 என்ற நுண்ணுயிர் பரவும் ஆபத்து ஏற்படலாம் என்று உலக சுகாதார திறனம் அறிவித்துள்ளது. எமது பகுதியில் கடந்த மூன்று வருட நிகழ்வுகளினால் குடிநீர், சூழல்,சுகாதாரம்போன்றவை வெகுவாகப் பாதிப்படைந்துள்ளன. அத்துடன் இடப்பெயர்வும், போஷாக்கின்மையும் நிலைமையை மோசமடையச் செய்துள்ளன என அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# ஜேர்மனியில் தமிழ்ச்சிறுமி தீவிரவாதிகளால் படுகொலை

ஜேர்மனியில் கல்விகற்று வந்த பதின்மூன்று வயதான தமிழ் மாணவி ஒருவர் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த செல்வி சுஜிதா புவனேஸ்வரன் என்ற தமிழ் மாணவியே கடந்த வாரம் இவ்வாறு இனந்தெரியாத கும்பல் ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

ஜேர்மனியில் வெளிநாட்டவர் குடியேறியிருப்பதை ஆட்சேபித்து பிரசாரம் செய்துவரும் தீவிரவாதிகளே இக்கொலையைச் செய்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

# பதிவுக்குட்படுத்திய ஊர்தி உரிமையாளர் கவனத்திற்கு

யாழ் மாவட்டத்தில் மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் பதிவிற்குட்படுத்தப்பட்ட தீவக/வலிகாமம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த மோட்டார் ஊர்திகளின் உரிமையாளர்கள் பதிவிற்குட்படுத்தப்பட்ட மோட்டார் ஊர்திகளை அழிப்பதோ அல்லது உரிமைமாற்றம் செய்வதோ ஆயின் இது பற்றி மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு பதிவாளரின் அனுமதியுடனேயே மேற்கொள்ள வேண்டும் என மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் பொதுமக்களிற்கு அறியத்தருகின்றனர்.


"மக்கள் அனைவரும் எழுச்சியடைவார்களாயின் தமிழீழம் உருவாவதை யாராலும் தடுக்க முடியாது. எமது உரிமைகளை நாமே வென்றெடுக்க வேண்டும். இதற்கு வேறுயாருடைய தயவையும் எதிர்பார்க்கக் கூடாது."

-திலீபன்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்

(சி-7435)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய ஒபேட் தமிழ் தட்டச்சு, ரெமிங்டன் மற்றும் ஆங்கில தட்டச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு: G. R. மருதலிங்கம், 8/1 அம்மன் வீதி, சுந்தர்மடம் யாழ்ப்பாணம். (6053)

## உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தவர்களுக்கான ஆகஸ்டு மாதத்திற்குரிய இறுதி இரண்டு வாரங்களிற்குமான உலர் உணவு விநியோகம் அடுத்த கிழமைநாட்களில் ஆரம்பமாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதற்கான உத்தரவை யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதி சகல பலநோ கூ சங்கங்களுக்கும் வழங்கியுள்ளது. அத்துடன் இந்நிவாரண விநியோகத்திற்குத் தேவையான பொருட்கள் ஏற்கனவே சகல பல நோ. கூ. சங்கங்களிற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

### கூட்டம்

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் பேரவை மண்டபத்தில் இன்று காலை பத்து மணிக்கு நடைபெறுமென்று பேரவையின் செயலாளர் அறிவித்துள்ளார். இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## நாளாந்த சேவை இல்லை

யாழ் மாவட்டத்திலுள்ள தனியார் போக்குவரத்து வாகன சங்கங்கள் அனைத்தும் இணைந்து யாழ் மத்திய பஸ் நிலையத்தில் எதிர்வரும் 24-ம் திகதி அன்று லெப் கேணல் திலீபனின் 6-ம் ஆண்டு நினைவாக அடையாள உண்ணாநோன்பு அனுஷ்டிக்க உள்ளதனால் அன்றையதினம் யாழ். மாவட்டத்திலுள்ள சிற்றூர்திகள் அனைத்தும் நாளாந்த சேவையில் ஈடுபடாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## விதை நெல் எடுத்துவரப்பட்டது

[தொல்புரம்]

கூடா நாட்டில் எதிர்வரும் பெரும்போக நெல் உற்பத்தியை மேற்கொள்வதற்காக

## கல்வியும் போராட்டமும் நெருங்கிய தொடர்புடையன

(மன்னார்) -நந்தகுமார்

கல்வியும் போராட்டமும் ஒன்றோடொன்று மிகவும் நெருங்கிய தொடர்புடையது. எனவே எமது போராட்டம் செல்கின்ற வேகத்திற்கு ஏற்ப பொது கல்வியையும் நாம் வேகமாக நகர்த்த வேண்டும். இந்த மண்ணிலே நல்ல அறிவுள்ள மாணவர்களை உருவாக்க வேண்டியது நம் அனைவரினதும் கடமையாகும்.

இவ்வாறு மன்னார் மாவட்டத்தில் பெரிய பண்டிவிரிச்சான் மூலாதாரப் பாடசாலையில் க. பொ. த. உயர்தர வகுப்புக்களை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் மன்னார் மாவட்ட அரசியல் துணைப் பொறுப்பாளர் திரு. நந்தகுமார் தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வில் மன்னார் கல்விப் பணிப்பாளர் திரு. ஜேக்கப் ஆசியுரை வழங்கினார். பண்டிவிரிச்சான் கொத்தணி அதிபர் திரு. அந்தோனி முத்து. மன்னார் மாவட்ட மாணவரமைப்பு பொறுப்பாளர் திரு இனியவன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

### சிப்பாயின் சடலம்

(கொழும்பு)

கிழக்கு மாகாண முகாமொன்றிலிருந்து விடுமுறையில் வீடு திரும்பிய இராணுவச் சிப்பாயின் சடலம் அளுத்கமவில் கிணறொன்றில் இருந்து மீட்கப்பட்டது.

## தடகள விளையாட்டுப்போட்டி ஏற்பாடுகள் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் தடகள விளையாட்டு விழாவுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வருடத்திற்கான போட்டிகள் வலயங்களாக நடைபெற்று பின்னர் மாவட்ட ரீதியில் இறுதிப் போட்டிகள் நடைபெறவுள்ளன. வலய மட்ட போட்டிகளில் முதல் நான்கு இடங்களையும்பெறும் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் மாவட்ட மட்ட இறுதிப் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்படவுள்ளனர்.

மாவட்டத்திலுள்ள சகல வட்டப் பிரிவுகளும் ஐந்து வலயங்களாக பிரிக்கப்பட்டுபோட்டிகள் நடைபெறும். சங்கானை சண்டிப்பாய், உடுவில் தெல்லிப்பழை ஆகிய பிரிவுகள் வலிமேற்கு எனவும் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரிவுகள் வலிகிழக்கு எனவும், மருதங்கேணி ஆகிய பிரிவுகள் வடமராட்சி எனவும், ஊர்காவற்துறை, வேலணை, நெடுந்தீவு பிரிவுகள் தீவகம் எனவும் ஐவலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

போட்டிகள் பற்றிய மேலதிக விபரங்களை வட்டப் பிரிவுகளின் விளையாட்டுப் பொறுப்பாளர்களிடம் பெற்றுக் கொள்வதுடன் போட்டிகளுக்கு வேண்டிய ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறும் சகல விளையாட்டுக் கழகங்களும் வீரர்களும், வீராங்கனைகளும் வேண்டப்பட்டுள்ளனர்.

## வெற்றிடங்கள் நிரப்ப நடவடிக்கை

யாழ் மாவட்ட பாடசாலைகளில் சுமார் ஐந்நூறு மாணவர்களுக்குக் குறையாமல் கற்கும் பாடசாலைகளுக்கு எழுதுவினைஞர் மற்றும் சிற்றூழியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இதற்கான அனுமதியை கல்வியமைச்சு யாழ். கல்வித் திணைக்களத்திற்கு வழங்கியுள்ளது இதன்படி பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்கள் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (பா)


### ஆதாரம் காட்டி பெறவும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தவறவிடப்பட்ட ஒரு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டு நிதிப் பிரிவு சந்தர் மடத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

பணத்தை தவறவிட்டவர்கள் எவரும் ஆதாரம் கொடுத்து பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப்ரினன்ட் தம்பி

பாலசுப்பிரமணியம் தேவராசா

[அண்ணன்]

| மலர்வு | வீரச்சாவு |
|---|---|
| 17-1-1971 | 1[illegible]-[illegible]-1991 |

தம்பி ஆண்டு இரண்டு போனதடா நீ
மண்ணை விட்டிங்கு
தம்பி, மணலாற்றுப் போரினிலே குண்டுகளின்
இரைச்சலுக்கிடையே மின்னியே மறைந்திட்டாய்
தம்பி உன் துள்ளும் நடையழகை எண்ணியே ஏங்குகின்றோம்
தினந் தினந் தேடியுன்னை அலைகின்றோம் நாமிங்கே
எம் உயிர் உள்ளவரை தம்பி உன் நினைவு நீங்காது.

G.P.S வீதி, கல்வியங்காடு (6047) நடராசா குடும்பத்தினர்

## அதிர்ஷ்ட இலாபச்சீட்டிழுப்பு ஒத்திவைப்பு

கம்பன் கழக சனசமூக நிலையத்தினால் 19-9 93 இல் நடாத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு எதிர்வரும் 10 10-93 ஆம் திகதி நடைபெறுமென்பதை அறியத்தருகின்றோம்

ந ஸ்ரீகரன், தலைவர் — ஆ. கணேசலிங்கம், செயலாளர்

**கம்பன் கழக சனசமூக நிலையம்**

புலோலி. (6051)

## அறிவித்தல்

### நெல்லியடி வர்த்தகர் சங்கம்

16-9-93 அன்று விளம்பரப்படுத்திய பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை நேர்முகப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது. அதன் விபரம் ஈழநாதம் பத்திரிகையில் பின்னர் அறிவிக்கப்படும்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### மேஜர் டேவிட் (செழியன்)

(குணரத்னம் செல்வகுமார்)

| மண்ணின் மீது: | மக்களின் மனங்களில்: |
|---|---|
| 30. 05. 1964 | 18. 09. 1991 |

சிங்களப் படைகள் கலங்கிடப் புகுந்து
செய்த உன் போர்க்களச் சிறப்பும்
செங்களம் நூறு ஆடிய நெஞ்சு
வீரமும் உறுதியும் தாய் மண்
எங்களின் சொந்தம் என்று நீ ஆயுதம்
ஏந்தியே நின்ற அவ் எழிலும்
கண்களில் நிற்கும் உன் தேசியப் பற்றும்
கடமையும் சரித்திரம் ஆகும்.

இராசேந்திரம் குளம், வவுனியா. (இ) - குடும்பத்தினர்

## நினைவு கூருகின்றோம் ... 1993-09-19

1986ஆம் ஆண்டு இந்த தினத்தில் திருமலை - மூதூர், எல் பி 03 பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப் துரைச்சாமி** [பொடியப்பு விநாயகமூர்த்தி - பெருவெளி, மூதூர் - திருமலை]

1989ஆம் ஆண்டு அம்பாறை - அட்டாளைச்சேனைப் பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**லெப். தேவா** [சாமித்தம்பி கிருஷ்ணமூர்த்தி - பாண்டிருப்பு, கல்முனை - அம்பாறை]

யாழ். நீர்வேலிப் பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய -

**சிறி** [சற்குணராசா பாஸ்கர் - தாளையடி ஒழுங்கை, திருநெல்வேலி - யாழ்]

1990ஆம் ஆண்டு மட்டுநகரின் பல்வேறு பகுதிகளிலும் சிறிலங்காப் படையினராலும், முஸ்லிம் ஊர்காவல் படையினராலும் சுட்டும், வெட்டியும் படுகொலை செய்யப்பட்ட குழந்தைகள், பெண்கள் உட்பட 85 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு வவுனியா - செட்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**டேவிட்/செழியன்** [குணரத்தினம் செல்வகுமார் - இராஜேந்திரன்குளம் - வவுனியா]

மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

## இல்லை

யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் போக்குவரத்து வாகன சங்கங்கள் அனைத்தும் இணைந்து யாழ். மத்திய பஸ் நிலையத்தில் எதிர்வரும் 24-ம் திகதி அன்று லெப். கேணல் திலீபனின் 6-ம் ஆண்டு நினைவாக அடையாள உண்ணா நோன்பு அனுஷ்டிக்க உள்ளதனால் அன்றையதினம் யாழ். மாவட்டத்திலுள்ள சிற்றூர்திகள் அனைத்தும் நாளாந்த சேவையில் ஈடுபடாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## விதை நெல்

### எடுத்துவரப்பட்டது

[தொல்புரம்]

கூடாநாட்டில் எதிர்வரும் பெரும்போக நெல் உற்பத்தியை மேற்கொள்வதற்காக கிளிநொச்சியிலிருந்தும், கொழும்பிலிருந்தும் விதை நெல்வகைகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

மேற்படி விதை நெல்வகைகள் பெரும்போக நெற்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாக வழங்கப்படவுள்ளதென தெரியவருகிறது. [41]

## ஓர் அதிபர், ஓர் ஆசிரியர்

(கொழும்புத்துறை)

யாழ். அர. வி முருகமூர்த்தி வித்தியாசாலையில் நூற்றிப் பத்து மாணவர்கள் கல்வி கற்கிறார்கள்.

ஆறு வகுப்புக்களைக் கொண்ட இப் பாடசாலையில் நீண்ட காலமாக ஓர் அதிபரும், ஒரு பயிலுநர் ஆசிரியருமே கடமையில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது. (24

## விநாயக சதுர்த்தி

(கொழும்புத்துறை)

தொல்புரம் வெட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள் கோவிலில 'விநாயகர் சதுர்த்தி' உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5-00 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை, வழிபாடுகளுடன், பஜனை — கூட்டுப்பிரார்த்தனைகளும் நடைபெறும். (24)

★

மானிப்பாய் மருதடி அருள்மிகு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் புரட்டாதி மாத விநாயகர் சதுர்த்தித் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை விசேட அபிஷேகம், பூசை, ஆராதனையுடன் இடம்பெறும்.

வசந்த மண்டபப் பூசையை யடுத்து விநாயகப்பெருமான் வீதி உலா வந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார். (24)

---



## லெப்ரினன்ட் தம்பி

பாலசுப்பிரமணியம் தேவராசா

[அண்ணன்]

| மலர்வு | வீரச்சாவு |
|---|---|
| 17-1-1971 | 1?-?-1991 |


தம்பி ஆண்டு இரண்டு போனதடா நீ
மண்ணை விட்டின்று
தம்பி, மணலாற்றுப் போரினிலே குண்டுகளின்
இரைச்சலிடையே மின்னிலே மறைந்திட்டாய்
தம்பி உன் துள்ளும் நடையழகையெண்ணியே ஏங்குகின்றோம்
தினந் தினந் தேடியுன்னை அலைகின்றோம் நாமிங்கே
எம் உயிர் உள்ளவரை தம்பி உன் நினைவு நீங்காது.

G.P.S வீதி
கல்வியங்காடு (6047)

நடராசா
குடும்பத்தினர்

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### சிறீஸ்கந்தராஜா சுதர்ணராஜி

[சுதர்ணா]

மயிலிட்டி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28-06-1972 | 20-08-1993 |

மொட்டவிழ்த்து மலராகி
முகிழுடைந்த மணம்பரப்ப
கட்டழகி தான்நீயே
காவியத்தில் நாயகியே-உனை இழந்து
பட்ட துயர் தீராது
பதறிநின்ற வேளையிலே
கட்டெறிக்கத் தணலெடுத்து
கவடழிய வைத்ததேனோ
சொர்க்கத்தின் ராஜ்யத்தில்
சுவர்ணராஜி ஆனாயே,
பாவியாய்நின்று பதறுகையில்
ஆவியாய் அரவணைக்க வந்ததென்ன
ஓவியமாய் நிலவிவிட்ட கண்மணியே
ஒளிவிளக்காய் என்றும் நின்றிடம்மா

தகப்பன் சிறீஸ்கந்தராஜாவும்,
தாய் சறேஜாவும், சகோதரர்,
உற்றார் உறவினர்,
நண்பர்களும்.

நா. மு ஒழுங்கை,
பருத்தித்துறை. (6046)

---

ந. ஸ்ரீகரன்
தலைவர்

ஆ. கணேசலிங்கம்
செயலாளர்

## கம்பன் கழக சனசமூக நிலையம்

புலோலி. (6051)

---

## அறிவித்தல்


### நெல்லியடி வர்த்தகர் சங்கம்

16-9-93 அன்று விளம்பரப்படுத்திய பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை நேர்முகப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது. அதன் விபரம் ஈழநாதம் பத்திரிகையில் பின்னர் அறிவிக்கப்படும்.

நெல்லியடி, (8449)

---

## அனித்தா பாடசாலையின்



## பொருட்காட்சி

- ஆடை தயாரிப்பு
- சமையற் கலை
- உள்ளக அலங்கரிப்பு
- சிகை அலங்காரம்
- கேக் தயாரிப்பு
- மணமகள் அலங்கரிப்பு

உங்கள் கண்ணுக்கும் கருத்துக்கும்
விருந்தாகும் பொருட்காட்சி

காலம் : 19-09-1993 – 21-09-1993
நேரம் : காலை 9மணி - மாலை 6 மணிவரை
இடம் : பூநாறி மரத்தடி,
கொக்குவில்.

[இ-7426]

---

வெளி, மூதூர் - திருமலை]

1989ஆம் ஆண்டு அம்பாறை - அட்டாளச்சேனைப் பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சமனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

லெப். தேவா [சாமித்தம்பி கிருஷ்ணமூர்த்தி - பாண்டிருப்பு, கல்முனை - அம்பாறை]

யாழ். நீர்வேலிப் பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய -

சிறி [சற்குணராசா பாஸ்கர் - தாளையடி ஒழுங்கை, திருநெல்வேலி - யாழ்]

1990ஆம் ஆண்டு மட்டுநகரின் பல்வேறு பகுதிகளிலும் சிறிலங்காப் படையினராலும், முஸ்லிம் ஊர்காவல் படையினராலும் சுட்டும், வெட்டியும் படுகொலை செய்யப்பட்ட குழந்தைகள், பெண்கள் உட்பட 85 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு வவுனியா - செட்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

டேவிட்/செழியன் [குணரத்தினம் செல்வகுமார் - இராஜேந்திரன்குளம் - வவுனியா]

மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

திமிலன் [சதாசிவம் ஜீவரட்ணம் - பாண்டிருப்பு - 02, கல்முனை - அம்பாறை]

கப்டன் இம்ரான் (தில்லையம்பலப்பிள்ளை ஜெகதீசன் - துறைநீலாவணை - மட்டு)

நேரு (பொன்னையா குமரதாஸ் - கிண்ணியா - திருமலை)

வில்லியம் (சாமுவேலப்பு விஜயராசா - 23, பாடசாலை வீதி - திருமலை)

லெப். எமில்டன் (பூச்சி கிருஷ்ணமூர்த்தி-153-ம கட்டை முறிகண்டி - கிளிநொச்சி)

மல்லிகா (செல்வலட்சுமி இராசலிங்கம் - 5-ம் வாய்க்கால் - கிளிநொச்சி)

சுமன் (இராசையா சந்திரகுமார் - நொச்சிக்குளம், ஓமந்தை - வவுனியா)

சிவகாமி (யோகராணி இலக்குமணன் - பூவரசங்குளம் - வவுனியா)

காமராஜி (ஆத்மஜோதி இராமையா - முரசுமோட்டை, பரந்தன் - கிளிநொச்சி)

2-ம் லெப். றொசான்/றோகான் (ஆறுமுகம் சந்திரன் - பள்ளிமுனை - மன்னார்)

கப்டன் சீலன் [தாமோதரம்பிள்ளை இளம்பிறைநாதன் - சங்கத்தானை - சாவகச்சேரி]

கப்டன் லோகிதன் (சின்னத்தம்பி கோகிலானந்தம் - சரவெட்டி மேற்கு - யாழ்)

லெப் தம்பி (பாலசுப்பிரமணியம் தேவராசா - கல்வியங்காடு - யாழ்)

பிருந்தன் (சுந்தரலிங்கம் இந்திரலிங்கம்-அல்வாய்வடக்கு வியாபாரிமூலை - பருத்தித்துறை)

கார்த்திகா [வசந்தா நடராசா - செங்கடிபுலம், வேலணை கிழக்கு]

தும்பன் (புகாதேவா குமணன் - மடத்தடி, சாவகச்சேரி வடக்கு - யாழ்)

ஜீவா [சுப்பிரமணியம் கமலநாதன் - 6-ம் வட்டாரம் - வேலணை மேற்கு]

மில்டன் (தட்சணாமூர்த்தி சங்கரதாஸ் - உரும்பராய் மேற்கு - யாழ்)

டென்சியா [விங்கநாயகி பத்திநாதன் - முள்ளியான், வெற்றிலைக்கேணி]

1992ஆம் ஆண்டு வெற்றிலைக்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர்ச் சமரில் வீரச்சாவெய்திய -

லெப். வேலன்/கிறிஸ் (வீணுகோபால் கிருஷ்ணகுமார் - புலோலி தெற்கு - யாழ்)

திருமலை மாவட்டத்தில் பொதுமக்கள் சென்ற வாகனம் மீது குண்டு வீசப்பட்டதில் பலியான தமிழ் மகன்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[இ-7446]

**சிந்தனைக்கு**

கடந்த காலம் தான் நிகழ்காலத்திற்குப் பாலம்
அதைப் புறக்கணிப்பதை விட பெருந்தவறு வேறு
எதுவுமில்லை

-அலெக்ஸாண்டர் ஹெர்சன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 19-09-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

# இரத்தத்தில் ஊறிவிட்டது

போரின் சுமைகளை தமிழ்மக்கள் மாத்திரமல்ல சிங்களவரும் சுமக்கின்றார்கள். ஏனெனில் இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் 72 வீதத்திற்கு மேல் அவர்கள் இருப்பதினால் பொருளாதாரப் பளுவையும், இராணுவம் சிங்கள மயமாக்கப்பட்டதினால் உயிரிழப்பையும் அவர்கள் ஏற்றுத்தான் ஆகவேண்டியுள்ளன. ஆனால், இவற்றை சிங்கள மக்கள் புரிந்து கொள்ள அரசாங்கமும், அதற்குத் தலைமை தாங்கும் பேரினவாதிகளும் விடுவதில்லை. தமிழருக்கு எதிராக இனவெறியை ஊட்டி அவர்களை, சிந்திக்கவிடாமல் செய்து விடுகின்றனர்.

சிறிலங்காவின் தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா, இப்பதவியை ஏற்க முன்னர் யுத்தம் இலங்கையின் பொருளாதாரத்தைச் சீரழிக்கின்றது எனவும் யுத்தத்திற்கெனச் செலவிடப்படும் 2 500 கோடி ரூபாவிற்கும் மேற்பட்ட தொகை மீதப்படுத்தப் படுமானால், நாடு அபிவிருத்திப் பாதையை நோக்கி விரைந்து முன்னேறிச் செல்லும் எனவும் அடிக்கடி கூறிவந்தார். இதன் காரணமாக உடனடியாக போர் நிறுத்தப்பட வேண்டும் எனவும் பேசிவந்தார்.

ஆனால், எதிர்பாராதவிதமாக, அவருக்குஜனாதிபதிப்பதவி கிடைத்ததும் அவரது முன்னைய பேச்சில் இருந்து நடவடிக்கைகள் முற்றாகவே மாற்றம் கண்டுள்ளன. போரை முன்னெடுத்துச் செல்வதற்கும் ஆயுதப்படையை விரிவாக்கம் செய்வதற்கும்அவர்மேலும், நிதி ஒதுக்கீட்டை செய்ய முன்வந்துள்ளார்.

அரசிற்கு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக இவ்வருடத்தின் ஆரம்பத்தில் இருந்து இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கை ஓரளவு தடைப்பட்டிருந்தது என்றே கூறலாம். ஆனால் மண்கிண்டிமலை தோல்வியை அடுத்து இராணுவத்தில் 10 000 பேரை உடன் சேர்த்துக்கொள்ள அரசு அனுமதி வழங்கியதோடு, அதற்குச் சலுகைகளையும் அறிவித்தது. இதேபோன்று கடற்படை சந்தித்த தோல்விகளைத் தொடர்ந்து கடற்புலிகளுக்கு எதிராக மீனவர்களைக் கொண்ட ஒரு படைப்பிரிவை அமைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

## திலீபன் நினைவாக ஒரு பாடல்

விருத்தம்

வாயிலொரு நீர்த்துளியும் போகவிட வில்லையய்யா
வாடிவிழும் போதினிலும் நீகலங்க வில்லையய்யா
பாயினிலே நீபடுத்து பன்னிரண்டு நாள்கிடந்தாய்
பாரதத்தின் வேடமதைத் தோலுரித்து நீவிழுந்தாய்.

பல்லவி

வெள்ளிமயில் துள்ளிவரும் வேலவனின் வீதியிலே...
பிள்ளைபசியால் துடித்த நேரம் — இங்கு
கொள்ளிவைக்க வந்தபடைக் கொடியவரைக்
கேட்டழுதோம்
கோரநெஞ்சில் ஊறவில்லை ஈரம்.

சரணம்

சோதனைகள் தாண்டிவந்த வானரங்களே —
நீங்கள்
தீயிலிட்டுத் தின்றதெல்லாம் பூமரங்களே !
பாரதமே! இங்குவந்து ஏன்கொளுத்தினாய் —எங்கள்
பார்த்திபனைச் சாவினிலே ... ஏன்விழுத்தினாய்

உன்னிடத்தில் நீதியெதிர் பார்த்திருந்தான்—தன்
உயிர்பிரிய முன்னரவன் உடல்கருகினான்
கண்ணிருந்து நீர்வழிய நாம்கலங்கினோம் —பின்னர்
காந்திதேசத் தோடுநாங்கள் போர்தொடங்கினோம்

விடியுமென்று காத்திருந்தோம் இருள்கவிந்தது —
எங்கள்
விடுதலைக்குப் போர்தொடுத்தோம் ஒளிபிறந்தது
இடியெனவே நடுவினிலே நீபுகுந்தனை — தமிழ்
ஈழமண்ணைத் தொட்டதினால் நீஅழிந்தனை.

— புதுவை இரத்தினதுரை.

## சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் விரைவில் இணைவு

(கொழும்பு)

சிறிலங்காவில் லங்கா சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் இரண்டும் மிகவிரைவில் ஒன்றிணைந்து செயல்படவுள்ளன.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி ஆகிய இரு கட்சிகளுமே ஒன்றிணைய இருப்பதாக ''ராவய'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இவ் இரு கட்சிகளும் இணைவது தொடர்பாக இரு கட்சிகளும் முடிவெடுத்து இருப்பதாகவும் இதற்கான நடவடிக்கையில் இரு கட்சிகளின் மத்திய கமிட்டிகளும் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக அக் கட்சிகளின் வட்டாரங்கள் தெரிவித்ததாக அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## அடுத்தஜனாதிபதி தேர்தலில் சிறிமாவோ வேட்பாளராவார்

(கொழும்பு)

சிறிலங்காவின் ஜனாதிபதித் தெரிவுக்காக அடுத்து வரும் பொதுத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளராக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க போட்டியிடுவார் எனக் கூடியபோது இதற்கான முடிவை மேற் கொண்டதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கூட்டத்தில் மேலும் அடுத்த பொதுத்தேர்தல் தொடர்பாகவும் சில முடிவுகள் மேற்...

# விவசாயிகள் நன்மை கருதி கமக்காரர் அடையாள அட்டை

எமது தாயக விடுதலைப் போராட்டமானது எத்தனையோ இடர்களுக்கு மத்தியில் பல வகைகளில் முனைப்புப் பெற்று வருகின்றது. இன்றைய காலகட்டமானது எமது விடிவை நோக்கி நாம் நகர்த்திக்கொண்டிருக்கும் இந்த விடுதலைப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இவ்வேளையில் இரண்டாவது ஈழப்போர் ஆரம்பித்த பின்னர் சிறிலங்கா அரசானது எம் மக்களின் மீது பொருளாதாரத்தடைகளை விதித்து அதன் மூலம் எமது போராட்டத்தை நசுக்கிவிட திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றது. விடியப்போகும் நமது (நாளைய) தமிழீழத்திற்கு அடி அத்திவாரமாக அமைந்துள்ளது எமது பொருளாதார வளர்ச்சியே. இந்தப் பொருளாதார வளர்ச்சியில் கணிசமான அளவு பங்கு வகிப்பது விவசாயமே.

சிறிலங்கா அரசு விதித்துள்ள இந்தப் பொருளாதாரத்தடையானது மக்களை மட்டுமல்லாது உற்பத்திசார் நடவடிக்கைகளையும் பாதித்துள்ளது. விவசாயத்திற்கு தேவையான உரம், கிருமிநாசினி, விதைகள் போன்ற பெரும்பாலான உள்ளீட்டுப் பொருள்கள் சிறிலங்காவிலிருந்தே கொண்டு வரப்படுகின்றன. எமது பொருளாதாரத்தை முடக்கும் நோக்குடன் அவ் உள்ளீட்டுப் பொருள்களை கட்டுப்படுத்தி எமது சுயதேவைக்கான விவசாய உற்பத்திகளை நசுக்குவதற்கு பல வழிகளிலும் முனைந்து செயற்பட்டு வருகின்றது, சிறிலங்கா அரசு.

இதன் காரணத்தால் எமது பொருளாதாரத்தில் கணிசமான பங்கை வகிக்கும் விவசாயமானது பின்னடையும் நிலைக்குத்தள்ளப்படுகின்றது. உள்ளீட்டுப் பொருள்களைத் துரிதமாகப் பெற முடியாத காரணத்தினால் விவசாயிகளில் பெரும்பாலானோர் விவசாயம் செய்வதற்கு தயங்குகின்றனர்.

இதனைக்கருத்திற்கொண்டு தமிழீழத்திற்குள் கிடைக்கும் விவசாய உள்ளீட்டுப் பொருள்களை பங்கீட்டு அடிப்படையில் விவசாயிகள் அனைவரும் பெறுவதற்கு ஏற்ற முறையில் இக்கமக்கார...

...சாரிய பொருளாதாரத்தின் கட்டமைப்பினை உருவாக்க முடியும்.

**விவசாயிகள் பெறும் நன்மைகள்:**

1. விவசாயத்தையே தொழிலாகக்கொண்டு வாழ்பவர் முதல் சிறு அளவில் பயிர் செய்கை மேற்கொள்பவர் சகலரும் விவசாய உள்ளீட்டுப் பொருள்களை கிரமமின்றி பங்கீட்டு முறையில் பெறுவதற்கு கமக்காரர் அடையாள அட்டை வழி வகுக்கின்றது.
2. அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றனவற்றால் வழங்கப்பட்டு வருகின்ற கடனுதவித் திட்டங்களால் வழங்கப்படும் உதவிகளை விவசாயிகளும் பெற்றுக் கொள்வதற்கு கமக்காரர் அடையாள அட்டை வழிவகுக்கின்றது.
3. விவசாயம் சம்பந்தமான சரியான புள்ளி விபரங்கள் பெறப்பட்டு அதன் மூலம் நீண்டகால திட்டத்தினை வகுத்து பயிர்ச் செய்கையை மேற்கொள்வதன்மூலம் எமது பொருளாதார கட்டமைப்பினை வளர்த்தெடுக்க இந் நடைமுறை உதவியளிக்கும்என நம்புகிறோம்.

**கமக்கார அடையாள அட்டை தொடர்பாக பின்பற்றப்படும் நடைமுறைகள்:**

1. இக்கமக்கார அடையாள அட்டையானது ஐந்து வருடங்களுக்கு பயன்படுத்தக் கூடியது. அதேவேளை வருடா வருடமும் வேறு விசேட நடைமுறையின் போதும் புதுப்பிக்கப்படும். கிராம சேவகரால் உறுதிப்படுத்தப்பட்ட இரண்டு புகைப்படங்கள் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும். அவற்றில் ஒன்று அடையாள அட்டையில் ஒட்டப்படும்.
2. காணி அமைந்துள்ள இடம், குத்தகையா, சொந்தமா என்ற விபரங்கள் பயிர் வகைகள், காணி உரிமையாளரின் பெயர், முகவரி என்பன காலா காலங்களில் பதிவேட்டில் பதியப்படும்.
3. உதவி வழங்கப்படும்போது வழங்கப்படும் பொருள்கள், அவற்றின் அளவுகள், செய்கை பண்ணப்படும் பயிர் வகை, வழங்கும் நிறுவனத்தின்பெயர் என்பன இதில் பதியப்படும்.

...ஏற்பட்டுள்ளவளர்ச்சிகள் அல்லது பாதிப்புக்களை பதியக் கூடிய வகையில் அடையாள அட்டை அமைக்கப்பட்டுள்ளது.

5. விவசாயிகளின் உறுதிப்படுத்தப்பட்ட தரவுகள் அனைத்தும் பெறப்பட்டு பதிவேடு தயாரிக்கப்பட்ட பின்னர் உரிமைக் கோரிக்கைகளுக்காகவும் ஆட்சேபனைகளுக்காகவும் ஒரு வார காலம் மக்களின் பார்வைக்கென அவ்வப்பகுதிகளில் வைக்கப்படும். சரியான தகவல்களுடன் ஆட்சேபனைகள் கிடைக்கப்பெறுமிடத்து அவை திருத்தி அமைக்கப்படும்.
6. ஒரு செய்கையாளர் தான் வசிக்கும் கிராம சேவையாளர் பிரிவோ அல்லதுமாவட்டத்தின் ஏனைய கிராமசேவையாளர் பிரிவிலோ பயிர்ச் செய்கையை மேற்கொண்டாலும் தாம் வசிக்கும் கிராம சேவகர் பிரிவு ஊடாகவே விண்ணப்பித்தல் வேண்டும்.
7. ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட எத்தனை பேர் விவசாயத்தை மேற்கொண்டிருப்பினும் ஓர் அடையாள அட்டையேவழங்கப்படும்
8. ஒரு காணியில் பயிர்ச் செய்கை மேற்கொள்பவர் பிறிதொரு செய்கையாளருக்கு அக்காணியை வழங்கும் போது அக்காணி அமைந்துள்ள கிராம சேவகர் பிரிவு மற்றும் காணி விபரங்களை குறிப்பிட்டு என்ன அடிப்படையில் காணி வழங்கப்படுகிறது என்பதை எழுத்து மூலம் உறுதிப்படுத்தி மற்ற செய்கையாளருக்கு அதன் பிரதியை வழங்கல் வேண்டும்.
9. செய்கையாளர் மாறும் போது பதிவுகள் உடனுக்குடன் மேற்கொள்ளப்படாவிடில் அப்பயிர்ச் செய்கைக்கு எவ்வித உதவிகளும் வழங்கப்பட மாட்டாது.
10. இடம்பெயர்ந்து வேறு கிராம சேவகர் பிரிவில் வசிப்பவர்களும் தாம் தற்காலிகமாக வசிக்கும் கிராமசேவகர் பிரிவு ஊடாக விண்ணப்பித்து தாம் செய்கை பண்ணும் காணி அமைந்துள்ள கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
11. இவ் அட்டையை வைத்திருக்கும் செய்கையாளர்கள் காணி சம்பந்தமான பிரச்சினைகளுக்கு இதனைச் சட்ட...

...திபதிப்பதவி கிடைத்ததும் அவரது முன்னைய பேச்சில் இருந்து நடவடிக்கைகள் முற்றாகவே மாற்றம் கண்டுள்ளன. போரை முன்னெடுத்துச் செல்வதற்கும் ஆயுதப்படையை விரிவாக்கம் செய்வதற்கும் அவர் மேலும் நிதி ஒதுக்கீட்டை செய்ய முன்வந்துள்ளார்.

அரசிற்கு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக இவ்வருடத்தின் ஆரம்பத்தில் இருந்து இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கை ஓரளவு தடைப்பட்டிருந்தது என்றே கூறலாம். ஆனால் மண்கிண்டிமலை தோல்வியை அடுத்து இராணுவத்தில் 10 000 பேரை உடன் சேர்த்துக்கொள்ள அரசு அனுமதி வழங்கியதோடு, அதற்குச் சலுகைகளையும் அறிவித்தது. இதேபோன்று கடற்படை சந்தித்த தோல்விகளைத் தொடர்ந்து கடற்புலிகளுக்கு எதிராக மீனவர்களைக் கொண்ட ஒரு படைப்பிரிவை அமைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அதாவது, சம்பளம், சீருடை, சலுகைகள் என்பனவற்றுடன் கூடிய படைப் பிரிவுகளை உருவாக்கவும், அவற்றிற்கு ஆயுத விநியோகம் செய்யவும் அரசாங்கம் தயாராகவுள்ளது. இந்நிலையானது, தற்பொழுது போர் செலவீட்டால் பெரும் சுமைக்கு உள்ளாகியுள்ள மக்கள் மீது மீண்டும் சுமைகளை ஏற்றுவதாகவே முடியும். ஆனால், அரசு அதை கவனிப்பதாக இல்லை. மாறாக, சுமைகளையும், நெருக்கடிகளையும் மேலும் அதிகரிக்கும் செயல் நடவடிக்கையிலேயே அரசு இறங்கியுள்ளது.

இந்த வகையில், மாணவர் இலவச மதிய உணவு மீதான வெட்டும் அடங்குகின்றது. மதிய உணவிற்காக மாணவர்களுக்கு கொடுக்கப்படும் இலவச உதவி அரசிற்கு பல மில்லியன் ரூபா இழப்பை ஏற்படுத்தினும், ஏழைகளாகவும், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மாணவர்களுக்கும் ஓர் ஊக்குவிப்பு என்பதும். ஒருமாதத்திற்கு வழங்கப்படும் பணம் ஓரிரு நாட்களுக்காவது, அவர்களின் பசியைப் போக்க உதவியது. இந்நிலையில், இலவச மதிய உணவில் வெட்டுவதென்பது, பாடசாலை வரவில் மாணவர் எண்ணிக்கையை குறைக்கும், அதேவேளை அவர்களின் கல்வியையும் பின்னடையச் செய்யும் என்பதிலும் சந்தேகமில்லை.

ஆனால், இவ்வாறான மானியங்கள் மீதான வெட்டிற்கு சிறிலங்காவிற்கு நிதியுதவி வழங்கும் உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற நிதி நிறுவனங்களின் நிர்ப்பந்தங்களே காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றன. கடன் கொடுத்த முதலாளி தனது முதலை அசலுடனும், வட்டியுடனும் மீளப் பெறறுக் கொள்ள முயற்சிப்பதும். அதனைத் திரட்டக் கூடிய வழிவகைகளைத் தெரிவிப்பதும் இயற்கையே இந்நிலையில். கடன் வழங்கிய இவ் அமைப்புக்கள் தமது நிபந்தனைகளை நிறைவேற்றுமாறு கோருவதும் இயல்பே. நிபந்தனைகளை நிறைவேற்றாவிடில் நிதிஉதவி வழங்க முடியாது எனத் தெரிவிப்பதும் சாதாரணமானதே.

ஆனால் இதனை சிறிலங்கா அரசு ஏற்றுக் கொள்ள முன்வந்திருப்பது அதன் பொருளாதார அவலத்தைக் காட்டுகின்றது. இதேவேளை சிறிலங்கா அரசின் இனக்குரோதத்தையும், போர் வெறியையும் காட்டுகின்றன. மாணவர் கல்வி எக்கேடு கெட்டால் என்ன? நாட்டின் பொருளாதாரம் சீர்கெட்டால் என்ன? தமிழர்களைத் தோற்கடிக்க வேண்டும் என்பது இனவெறியை வெளிப்படுத்துகின்றது. இந்நிலையில் எதிர்காலத்தில் இலவச மாணவர் உணவுமுத்திரை மட்டுமல்ல, இலவசக் கல்வி. இலவச மருத்துவத்தைக் கூட அரசு நிறுத்தி தமிழருக்கு எதிரான போரை நடத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை அந்தளவிற்கு இனவெறி அவர்கள் இரத்தத்தில் ஊறிவிட்டது.

...மார்க்ஸியக்கட்சியின் இரண்டும் மிகவிரைவில் ஒன்றிணைந்து செயல்படவுள்ளன.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி ஆகிய இரு கட்சிகளுமே ஒன்றிணைய இருப்பதாக "ராவய" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

...வது தொடர்பாக இரு கட்சிகளும் முடிவெடுத்து இருப்பதாகவும் இதற்கான நடவடிக்கையில் இரு கட்சிகளின் மத்திய கமிட்டிகளும் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக அக்கட்சிகளின் வட்டாரங்கள் தெரிவித்ததாக அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## அடுத்தஜனாதிபதி தேர்தலில் சிறிமாவோ வேட்பாளராவார்

(கொழும்பு)

சிறிலங்காவின் ஜனாதிபதித் தெரிவுக்காக அடுத்து வரும் பொதுத் தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளராக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க போட்டியிடுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மத்திய கமிட்டி கடந்த ஒன்பதாம் திகதியன்று கூடியபோது இதற்கான முடிவை மேற்கொண்டதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கூட்டத்தில் மேலும் அடுத்த பொதுத்தேர்தல் தொடர்பாகவும் சில முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், பொதுவாக கட்சிகளுக்கான இட ஒதுக்கீடு தொடர்பாக ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது தேவைகளுக்கான விவசாய உற்பத்திகளை நசுக்குவதற்கு பல வழிகளிலும் முனைந்து செயற்பட்டு வருகின்றது, சிறிலங்கா அரசு.

இதன் காரணத்தால் எமது பொருளாதாரத்தில் கணிசமான பங்கை வகிக்கும் விவசாயமானது பின்னடையும் நிலைக்குத்தள்ளப்படுகின்றது. உள்ளீட்டுப் பொருட்களைத் துரிதமாகப் பெற முடியாத காரணத்தினால் விவசாயிகளில் பெரும்பாலானோர் விவசாயம் செய்வதற்கு தயங்குகின்றனர்.

இதனைக்கருத்திற்கொண்டு வட தமிழீழத்திற்குக் கிடைக்கும் விவசாய உள்ளீட்டுப் பொருட்களை பகிர்ந்து அடிப்படையில் விவசாயிகள் அனைவரும் பெறுவதற்கு ஏற்ற முறையில் இ[illegible] அட்டை வழங்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் விவசாயம் சார் நடவடிக்கைகளையும் உற்பத்தி சார் நடவடிக்கைகளையும் ஊக்குவித்தல்...

...கூடியது. அதேவேளை வருடா வருடமும் வேறு விசேட நடைமுறையின் போதும் புதுப்பிக்கப்படும். கிராம சேவகரால் உறுதிப்படுத்தப்பட்ட இரண்டு புகைப்படங்கள் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படல் வேண்டும். அவற்றில் ஒன்று அடையாள அட்டையில் ஒட்டப்படும்.

2. காணி அமைந்துள்ள இடம், குத்தகையா, சொந்தமா என்ற விபரங்கள் பயிர் வகைகள், காணி உரிமையாளரின் பெயர், முகவரி என்பன காலா காலங்களில் பதிவேட்டில் பதியப்படும்.
3. உதவி வழங்கப்படும்போது வழங்கப்படும் பொருட்கள், அவற்றின் அளவுகள், செய்கை பண்ணப்படும் பயிர் வகை, வழங்கும் திகதி பெயர் என்பன இதில் பதியப்படும்.
4. விவசாயச் செயற்பாடு கால்நடைவளர்ப்பு போன்றவற்றை வெவ்வேறு உற்பத்தி போகத்தில் மேற்பார்வை செய்பவரும் போது இவற்றில்...

...திப்படுத்தி மற்ற செய்கையாளருக்கு அதன் பிரதியை வழங்கல் வேண்டும்.
9. செய்கையாளர் மாறும் போது பதிவுகள் உடனுக்குடன் மேற்கொள்ளப்படாவிடில் அப்பயிர்ச் செய்கைக்கு எவ்வித உதவிகளும் வழங்கப்பட மாட்டாது.
10. இடம்பெயர்ந்து வேறு கிராம சேவகர் பிரிவில் வசிப்பவர்களும் தாம் தற்காலிகமாக வசிக்கும் கிராமசேவகர் பிரிவு ஊடாக விண்ணப்பித்து தாம் செய்கை பண்ணும் காணி அமைந்துள்ள கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
11. இவ் அட்டையை வைத்திருக்கும் செய்கையாளர்கள் காணி சம்பந்தமான பிரச்சினைகளுக்கு இதனைச் சட்ட ஆவணமாக பயன்படுத்த முடியாது.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்.

இலீபன்

...கள் உட்பட ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள் என்ற வயது வேறுபாடு இன்றி தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு வருகின்றனர்.

யாழ் மாவட்ட சிற்றூர்தி சேவைச் சங்கங்களின் இணையத்தினர் குடா நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் தியாகி திலீபனின் வரலாற்றுக் குறிப்புக்கள் அடங்கிய கண்காட்சிப் பந்தல்களை அமைத்துள்ளனர். யாழ். மத்திய பஸ் நிலையம், மூளாய் பிள்ளையார் கோவிலடி, சித்தன்கேணிச் சந்தி, சுன்னாகம், அச்சுவேலி, வல்வெட்டித்துறை, நெல்லியடி, மருதங்கேணி, சாவகச்சேரி ஆகிய பஸ் நிலையங்களிலும் இவ்வாறான பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றைவிட மேற்படி சங்கத்தினர் திலீபனின் உருவப்படம் தாங்கிய தேர் பவனி நிகழ்வுக்கும், காவடி நிகழ்வுக்கும் ஏற்பாடு செய்துள்ளனர். இன்றைய தினம் காலை 9.00 மணியளவில் யாழ். பஸ்நிலையத்திலிருந்து மேற்படி பவனி ஆரம்பமாகி ஆனைக்கோட்டை, மானிப்பாய் வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, மூளாய்மற்றும் மாகியப்பிட்டி, அளவெட்டி, சுன்னாகம் ஆகிய பகுதிகளைச் சென்றடையும்.

நாளைய தினம் சுன்னாகத்தில் இருந்து காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி மருதனார்மடம், இணுவில், கொக்குவில், தட்டாதெரு, கந்தர்மடம், திருநெல்வேலி, கோண்டாவில், ஊரெழு, புன்னாலைக்கட்டுவன் ஆகிய பகுதிகளுக்குச் செல்லும்.

நாளை மறுதினம் காலை 9.00மணியளவில் நெல்லியடிச் சந்தியில் இருந்து ஆரம்பமாகி உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, வதிரி, மந்திகை, பருத்தித்துறை, வல்லிபுரக்கோவில் ஆகிய பகுதிகளுக்குச் செல்லும்.

இவ்வாறான நிகழ்வுகளில் பங்கு கொள்ளும் படி மேற்படி நிகழ்வுகளை ஏற்பாடுசெய்யும் பொதுசன அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

(35) (36)

## இடம் பெயர்ந்தோருக்கு அடுத்தகட்ட உணவு முத்திரை

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தவர்களுக்கு இம் மாதம் தொடக்கம் நிவாரணம் வழங்குவதற்கான உலர் உணவு முத்திரைகள் யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியினால் சகல பிரதேச செயலர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே வழங்கப்பட்ட உலர் உணவு முத்திரைக்கான கொடுப்பனவுகள் சென்ற மாதத்துடன் முடிவடைந்தமையை அடுத்து புதிய உலர் உணவு முத்திரைகள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி உணவு முத்திரைகளை இடம்பெயர்ந்தவர்கள் அவரவர் பகுதி கிராம சேவகர் மூலம் பெற்று தமக்குரிய இம்மாத கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டது.

கடல்

...கொண்டிருந்த தடை உத்தரவை சிறிலங்கா அரசு மீளப்பெற்று விட்டதாக இந்திய வானொலி அறிவித்தது.

சிறிலங்காவின் வெளிநாட்டமைச்சு வட்டாரங்களை மேற்கோள்காட்டி வெளியிடப்பட்ட செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது. 1976ஆம் ஆண்டில் எட்டப்பட்ட இந்திய-இலங்கை எல்லை உடன்பாட்டின் கீழ் இந்திய மீனவர்கள் கச்சதீவு செல்வதற்கான உரிமையை அங்கீகரிக்க சிறிலங்கா அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்த்

கடற்பரப்பில் மூன்றில் இரு பகுதியையும் விட்டுக்கொடுப்பதா என்று சிங்களத் தேசியவாதிகள் கூறுகிறார்கள். ஆனால் தமிழ்மக்கள் பல நூற்றாண்டுகளாக இவற்றை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தனர். இன்னமும் வைத்துள்ளனர். இந்த உண்மையை இவர்கள் புறக்கணிக்கின்றனர்.

அதிகாரப்பகிர்வு குறித்த பேச்சுக்கள் தமது தாயகத்தில் தம்மைத் தாமே ஆட்சி செய்வதற்கு தமிழர்கள் தீர்மானித்துவிட்டார்கள் என்ற உண்மைக்கும் அவ்வாறு தமது தாயகத்தில் தமிழ் மக்கள் தம்மைத்தாமே ஆட்சிசெய்வதற்கு எவ்விதமான உரிமைகளையும் எவரும் பகிர்ந்தளிக்க வேண்டிய தேவை இல்லையென்ற உண்மைக்கும் எதிராக அமைகிறது.

விடுதலைப் புலிகளை ஆயுதங்களைக் கைவிடுமாறு விடுக்கும் கோரிக்கையானது மறுபுறத்தில் சரணடைவதைத் தான் குறிக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## விவசாய செயல்படுதிட்டம் கருத்தரங்கு ஆரம்பம்

கடந்த வருடம் 1992 காலபோக 1993 சிறுபோக விவசாய இலக்குகளைத் தீர்மானிப்பது தொடர்பாக கிளிநொச்சி விவசாய பீடத்தில் துறைசார்ந்த நிபுணர்கள், விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்ட கருத்தரங்கு ஒன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனத்தால்ஏற்பாடு செய்யப்பட்டது தெரிந்ததே. இக் கருத்தரங்கிற்கு விவசாய இலக்குகள் தீர்மானிக்கப்பட்டதும் அதற்கான உள்ளீட்டுத் தேவைகளை பெறும் வழிவகைகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டதனாலும் கடந்த காலபோக, சிறுபோக உற்பத்தி அதிகரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான ஒரு இலக்கினைத் தீர்மானிப்பதற்காக இன்று 19-09-93 தொடக்கம் 28-09-93 வரை கிளிநொச்சி கோட்டத்தில் வட தமிழீழத்திற்கான 93/94 விவசாய செயல்படு திட்டம் தயாரிப்பதற்கான கருத்தரங்கு ஒன்றினை மேற்கொள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், இக் கருத்தரங்கில் சகலமாவட்டங்களிலும் உள்ள சிறு நீர்ப்பாசனக் குளங்களை பயிர் உற்பத்தியில் உச்ச விளைவைப் பெறும் வகையில் புனரமைத்தல் தொடர்பாகவும், விலங்கு வேளாண்மை அபிவிருத்தி இலக்குகளை தீர்மானித்தல் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு

## ஆயுதமுனை அணுகுமுறை நன்மைதரும் காரியமல்ல

வடக்கு கிழக்குப் பிரச்சினை எமது உள்வீட்டுப் பிரச்சினையாகும். இதனை ஆயுதமுனையில் அணுகுவது ஒருபோதும் நன்மையளிக்கும் காரியமாகி விடாது என்று வெளிநாட்டமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீத் தெரிவித்தார்.

அக்குறணையில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டுபேசிய அவர் மேலும் கூறுகையில், இந்த நாட்டின் எதிர்கால வளத்துக்கு சவாலாக இன்றுள்ள பிரச்சினை பூதாகரமாக உருவெடுப்பதற்கு பரஸ்பர நம்பிக்கையும் நல்உணர்வுகளும் இல்லாமையுமே காரணமாகும். இவற்றை வளர்த்துக் கொள்ளாதவரை சேதம் தலை தூக்கவே செய்யும்.

வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியில்தான் தீர்வு ஏற்படவேண்டுமேதவிர யுத்தகளத்திலே இதற்கான தீர்வு காணப்படக் கூடாது. பேச்சுவார்த்தைகளே பரஸ்பர நல்லெண்ணங்களுக்குவழிவகுக்கும் எனவும் தெரிவித்தார்.

ஈழநாதம்

# படையினர் அடாவடித்தனத்திற்கு லொறி உரிமையாளர் கண்டனம்

## டி. பி. விஜேதுங்காவிற்கு மகஜர்

(கொழும்பு)

எந்தவிதமான சிவில் வேலைகளுக்கும் பயிற்றப்படாத மடிப்பறிவில்லாத படையினர் சோதனை என்ற பெயரில் நடத்தும் அடாவடித்தனங்கள் தொடர்பாக வடபகுதி லொறி உரிமையாளர்கள் ஜனாதிபதி விஜேதுங்காவிற்கு முறையிடும் மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

பிரதமர் ரணில், எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ, சபாநாயகர் முகம்மது, அமைச்சர் தொண்டமான் உட்பட பல அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் வெளிநாட்டு தூதுவராலயங்கள் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலருக்கும் இந்த மகஜரின் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

சட்டம் தங்கள் கையில்தான் இருக்கிறது என்ற எண்ணத்தில் செயற்படும் இப்படையினர். நாட்கணக்கில், வாரக்கணக்கில், ஏன் மாதக் கணக்கில் கூட சோதனைச் சாவடிகளுக்கு அருகே ஆபத்து நிறைந்த காட்டுப் பகுதியில் லொறிகளைத் தடுத்து வைப்பதாகவும் லொறிகளின் சாரதிகளும் நடத்துநர்களும் அவமரியாதைக்கு உட்படுத்தப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் வாகனங்கள் மறிமுதல் செய்யப்படுவது, வாகனங்கள் சேதமாக்கப்படுவது. என்பன நடப்பதாகவும் தாண்டிக்குளம் சோதனை முகாமிலுள்ள தமிழ்க் குழுக்களின் தொல்லைகளுக்கு உள்ளாகுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆட்கள் திடீரென்று தடயம் ஏதுமின்றி காணாமல் போகின்ற நாடாக இருப்பதால் தாங்கள் கைச்சாத்திடவில்லை எனவும் அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

### வருந்துகின்றோம் தவறான விளம்பரம்

15.9.93இல் எம்மால் தவறாகப் பிரசுரிக்கப்பட்ட கண்ணீர் அஞ்சலிசார்பாக அறியத் தருவது: திரு. கு. எ. தேவதிரவியம் [J.P] அவர்களுக்கும். குடும்பத்தினருக்கும் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

தலைவர், பணிப்பாளர் சபை
ஊழியர்கள்

வடமாகாண கடற்தொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
201, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [5064]

---

### 41-ம் நாள் நினைவஞ்சலி



---

### கொலரா

ளது.

அக் குறிப்பில் மேலும், இப்படியான நிலையில் மீண்டும் கொலரா நோய் பரவும்வாய்ப்புண்டு. தற்பொழுது காணப்படும் நோய் யாழ். வைத்திய சாலை வைத்திய நிபுணர்களால் கொலராவாக இருக்கலாமென்று நோய் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆய்வுகூட சேவைகள் பாதிப்புற்ற நிலையில் இருப்பதால் ஊர்ஜிதம் செய்ய முடியாதிருக்கின்றது. ஆகையால் குறிப்பிட்ட நோய் கொலராவெனக் கருதி யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற எல்லைக்குள் காணப்பட்ட நோயாளர் தொடர்பாக சகல நடவடிக்கைகளையும் எமது சுகாதாரப் பிரிவு செய்துவருகின்றது. இதனை முனையில் கிள்ளியெறியாவிட்டால் நோய் பலரைப் பாதிக்கும் ஆபத்து உண்டு.

ஆகையால் பின் வரும் ஆலோசனைகளை மக்கள் பின்பற்றி தமது பணிக்கு உதவுமாறு வேண்டுகின்றார்.

★ நீங்கள் வதியும் இடத்தை துப்புரவாக வைத்திருக்க உங்களுக்கு பெரும் பங்குண்டு.

---

# லெப். தெய்வேந்திரனுக்கு மக்கள் இறுதி அஞ்சலி

(தென்மராட்சி)

கடந்த 15ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் விபத்து ஒன்றில் காயமடைந்து பின்னர் வீரச்சாவைத்தழுவிக்கொண்ட திருமலையைச் சேர்ந்த லெப். தெய்வேந்திரன் என்பவரது புகழுடல் நேற்று முன்தினம் மீசாலை புத்தூர்சந்தி நெசவு சென்ரரில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அஞ்சலியின் பின்பு இம் மாவீரருடைய நினைவஞ்சலிக் கூட்டம் கொடிகாமம் வட்டப் பொறுப்பாளர் திரு. விமல் தலைமையில் இடம்பெற்றது. இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையைச் சேர்ந்த தமிழன், பொற்கோவன் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினர். இம் மாவீரருக்கு பெரும் திரளான மக்கள் வந்து தமது இறுதி அஞ்சலியை மலர்தூவி செலுத்தினர். மாணவ, மாணவிகளும் அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டனர். இவரது வித்துடல் பின்னர் தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறை அலுவலகத்தில் வைக்கப்பட்டு இறுதியாக விடுதலைப் புலிகளின் இராணுவ மரியாதையுடனும் மாணவர் அமைப்பின் பாண்ட் வாத்திய மரியாதையுடனும் கொடிகாமம் மாவீரர்துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு விதைக்கப்பட்டது. (86)

---

### புறக்கோட்டை

ளம் காணப்பட்டதாகவும் அதிகாரி மேலும் தெரிவித்தார்

இதேவேளை கொழும்பு நகரில் நாளாந்தம் வரும் வாகனங்கள் தொடர்பாக மிகுந்த அவதானமாக இருக்குமாறும் உடனடியாக தேவையற்ற நபர்களோ அல்லது வாகனங்களின் நடமாட்டம் காணப்பட்டால் உடனடியாக இரகசிய தகவல் பிரிவுக்கு அல்லது பாதுகாப்பு பிரிவினருக்கு அறியதருமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

---

### யாழ். நகரில்

தனியான ஒரு அறையில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை கைதடியைச் சேர்ந்த சிறுமி ஒருவருக்கும் இந்நோய் ஏற்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றது. இச்சிறுமியும் தற்போது யாழ். போதனா மருத்துவ மனையில் வேயே சிகிச்சை பெற்று வருகின்றார் [சி]

---

ளாதீர்கள்.

★ குடிப்பதற்கான நீரை சுத்தமான இடங்களிலிருந்தும், சுத்தமான பாத்திரங்களைப் பாவித்தும் பெற்றுக்கொள்ளுங்கள், நீரைக் கொதிக்க வைப்பதன்மூலம் கிருமிகளை அழிக்கலாம்.

★ உணவை சுத்தமான முறையில் தயாரித்துக் கொள்ளுங்கள்.

★ இலையான்கள் பெருகக் கூடிய குப்பை கூளங்களை இடங்களைவெட்டி புதையுங்கள்

★ உணவு உட்கொள்ள முன்னும், உணவைத் தயாரிக்க முன்னும், மலசலகூடம் போய் வந்த பின்னும் கைகளை சவர்க்காரம்போட்டு நன்றாகக் கழுவிக்கொள்ளுங்கள்.

---

### போர்க்கூத்து

சிங்கள அரசு எமது விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக விடும் எந்தவித இராணுவ அரசியல் அழுத்தங்களையும் தகர்த்தெறிந்து வெற்றி கொள்ள அனைத்து மக்களும் தயாராகுங்கள், என்ற போர்க்கூத்து யாழ். மாவட்ட கலைபண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் நேற்று முன்தினம் உடுவில் ஞானப்பிரகாசர். உதயசூரியன் சனசமூக நிலைய முன்றலிலும் நேற்று உடுவில் சஞ்சடி வைரவர் கோவிலடி டச்றோட் பகுதியிலும் பெரும் திரளான மக்கள் மத்தியில் நிகழ்ந்தது.

---

### இயாகி

கோண்டை முத்துவிநாயகர் கோவில் முன்றல், மானிப்பாய் தெ. ப. வொ. உ. கூ. சங்கம்; உடுவில்/தெல்லிப்பளை வட்டம், சுன்னாகம் சிவன்கோவில் முன்றல், மல்லாகம் சிற்றூர் மக்கள்; யாழ்ப்பாணம் வட்டம், நல்லூர் கந்தசாமி கோவில் வீதி, சுண்டுக்குளி சிற்றூர் மக்கள்; நல்லூர் வட்டம், நல்லூர் கந்தசாமி கோவில் வீதி, போக்குவரத்து சபை ஊழியர். திருநெல்வேலி மக்கள்; கரவெட்டி வட்டம் நெல்லியடி சாமியன் அரசடி, கரவெட்டி மேற்கு சிற்றூர் மக்கள், பாடசாலை மாணவர்கள், உடுப்பிட்டி வட்டம், உடுப்பிட்டி மதிி வைரவர் கோவிலடி, உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்க ஊழியர்; பருத்தித்துறை வட்டம், அல்வாய் முத்துமாரியம்மன் கோவிலடி, அல்வாய் வடமேற்கு, வியாபாரிமூலை மக்கள், பளை வட்டம், பளை பிரதேச சபை முன், இத்தாவில் சிற்றூர், வாசன சங்கம், இயக்கச்சி அரச தமிழ்க் கலவன் பாடசாலை; கொடிகாமம்

---

### பதவி வெற்றிடம்

**கணக்காளர் பதவி (ஆண்)**

கிளிநொச்சியில் இயங்கும்
பத்திரிகை நிறுவனத்துக்கு

**கணக்காளர் தேவை**

சம்பளம்: மாதாந்தம் ரூ. 3000/-

அத்துடன் இலவச தங்குமிட வசதி சாப்பாடு ஆகியனவும் ஒழுங்கு செய்து தரப்படும்.

தகுதியான ஆண் விண்ணப்பதாரர் 22 09 93 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு தகைமைச் சான்றிதழ்கள், முன் வேலை அனுபவச் சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் நேரில் சமுகம் தரவும்.

ஈழநாதம் நிறுவனம்
யாழ்ப்பாணம்.

(இ)

---

யாழ் நகர் **ஸ்ரீதர்** திரை யரங்கில்

**VON RYAN'S EXPRESS**

இத்துடன் 'இதயபூமி 1' [மன்னிண்டிமலை இராணுவமுகாம் தகர்ப்பு] ஒளிவீச்சு காண்பிக்கப்படுகிறது

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மணி,
மாலை 4.00 மணி, 6.00மணி (அ-7352)

---

### 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



வடமாகாண கடற்தொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
201, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [5064]

## 41-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி [illegible]

**இரத்தினேஸ்வரி நடனசிகாமணி**

அன்பின் மலர்வு: 03-06-1935

அகால உதிர்வு: 10-08-1993

அம்மா அம்மா என்று கதறி அழுகின்றோம்
ஆறுதல் கூற எமக்கு யார்தான் இருக்கின்றார்?
ஆகாயக் கோட்டை எல்லாம் சிதறியே விட்டதம்மா
சகைச்கடர் ஏற்றிவிட்டு கப்டன் அலனுடன் சென்றீரோ?
பேரப்பிள்ளைகளைப் பார்க்க இன்பமுடன் இந்தியா சென்றீரோ?
தீயோடு கலந்தாலும் உங்கள் அன்பை விட்டுச் சென்றீரோ?
பிள்ளைகளை விட்டு நீங்கள் வெகுதூரம் சென்றீரோ?
நீங்கள் போகாதா கோவில் உண்டா?
நீங்கள் செய்யாதா தொண்டும் உண்டா?
நீங்கள் வணங்கிய தெய்வம் யாவும் கைகழுவி விட்டனரோ?
நீங்கள் ஏற்றிய ஒளி இன்றும் இன்பமுடன் எரியுதம்மா!

இன்று காலை எமது இல்லத்தில் நடைபெறும் அஸ்தி சங்கம வைபவத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

கப்டன் அலன் வீதி,
அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை.

வ. இ. நடனசிகாமணி
குடும்பத்தார், சுற்றத்தார்,
உறவினர்.

(சி/7443)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

செய்யப்பட்டுள்ளது. ஆய்வு கூட சேவைகள் பாதிப்புற்ற நிலையில் இருப்பதால் ஊர்ஜிதம் செய்ய முடியாதிருக்கின்றது. ஆகையால் குறிப்பிட்ட நோய் கொலராவெனக் கருதி யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற எல்லைக்குள் காணப்பட்ட நோயாளர் தொடர்பாக சகல நடவடிக்கைகளையும் எமது சுகாதாரப் பிரிவு செய்துவருகின்றது. இதனை முளையில் கிள்ளியெறியாவிட்டால் நோய் பலரைப் பாதிக்கும் ஆபத்து உண்டு.

ஆகையால் பின்வரும் ஆலோசனைகளை மக்கள் பின்பற்றி தமது பணிக்கு உதவுமாறு வேண்டுகின்றார்.

★ நீங்கள் வதியும் இடத்தை துப்புரவாக வைத்திருக்க உங்களுக்கு பெரும் பங்குண்டு.

★ அவசியமான மலகூடங்களை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ அமைக்கவும்.

★ மலகூடங்களை மற்றவர்களும் பாவிக்கக்கூடியதாக இயன்றளவு துப்புரவாக வைத்திருங்கள்.

★ வெளியான இடங்களில் மலம் கழிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

★ கிணற்றை அசுத்தப்படுத்தாதீர்கள்.

★ குடிப்பதற்கான நீரை சுத்தமான இடங்களிலிருந்தும், சுத்தமான பாத்திரங்களைப் பாவித்தும் பெற்றுக்கொள்ளுங்கள். நீரைக் கொதிக்க வைப்பதன்மூலம் கிருமிகளை அழிக்கலாம்.

★ உணவை சுத்தமான முறையில் தயாரித்துக் கொள்ளுங்கள்.

★ இலையான்கள் பெருகக்கூடிய குப்பை கூளங்களை இடங்குவெட்டி புதையுங்கள்

★ உணவு உட்கொள்ள முன்னும், உணவைத் தயாரிக்க முன்னும், மலசலகூடம் போய் வந்த பின்னும் கைகளை சவர்க்காரம்போட்டு நன்றாகக் கழுவிக்கொள்ளுங்கள்.

★ நீங்கள் தங்கியிருக்கும் இடத்தில் யாருக்காவது வயிற்றோட்டநோய் இருந்தால் உடனேயே வைத்தியரை நாடுங்கள்.

கொலரா நோயினால் ஏற்படும் கடும் பாதிப்பை உடனடியாக நீராகாரம் கொடுப்பதினாலும், சிகிச்சை பெறுவதினாலும் முற்றாகத் தடுக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 18-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 10950
வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்
வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-6745, 24-7087, 26-7397, 27-9416, 41-5417, 36-9823, 24-7941, 26-8746, 28-8229, 26-3068, 27-7750.

41-9995, 27-2089, 26-8674, 24-5015, 24-6699, 42-1464, 26-0763, 26-6933, 42-3267, 41-1996, 42-3339, 27-6439.

## எமது புதிய வெளியீடுகள்

(1) சரவணனின்...
**நல்லதே நடக்கும்**

(2) மம்முட்டியின்...
**சாணக்கியன் தந்திரம்**

(3) குஸ்பூவின்...
**காலேஜ் ரவுடி**

**வீடியோ விமல்**
117, மானிப்பாய் வீதி
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-7449)

கின்றார் [சி]

கோவில் வீதி, கண்டுக்குளி சிற்றூர் மக்கள்; நல்லூர் வட்டம், நல்லூர் கந்தசாமி கோவில் வீதி, போக்குவரத்து சபை ஊழியர், திருநெல்வேலி மக்கள்; கரவெட்டி வட்டம் நெல்லியடி சாமியன் அரசடி, கரவெட்டி மேற்கு சிற்றூர் மக்கள், பாடசாலை மாணவர்கள், உடுப்பிட்டி வட்டம், உடுப்பிட்டி மத்தி வைரவர் கோவிலடி, உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்க ஊழியர்; பருத்தித்துறை வட்டம், அல்வாய் முத்துமாரியம்மன் கோவிலடி, அல்வாய் வடமேற்கு, வியாபாரிமூலை மக்கள், பளை வட்டம், பளை பிரதேச சபை முன், இத்தாவில் சிற்றூர், வாகன சங்கம், இயக்கச்சி அரச தமிழ்க் கலவன் பாடசாலை; கொடிகாமம் வட்டம், புகையிரத நிலைய அருகாமை, மதி ஒளி ச. ச. நிலையம், செல்வா ச. ச. நிலையம் வரணி, நவா ச.ச. நிலையம் டெமியன், நாவற்காடு இளங்கோ ச. ச. நிலையம், வரணி மகாவித்தியாலயம், மந்துவில் றோ.க. பாடசாலை; சாவகச்சேரி வட்டம் மணம்குணாப் பிள்ளையார் கோவில் முன்பாக சங்கத்தானை, மட்டுவில் கிழக்கு, நுணாவில் மேற்கு, மட்டுவில் மத்தி, தபாற்கந்தோர், மின்சாரசபை, இந்துக்கல்லூரி; கைதடி வட்டம் கைதடிச் சந்திக்கு அருகாமையில், நாவற்குழி சிற்றூர், தச்சன்தோப்பு, கோயிலாக்கண்டி மாதர் சங்கம், கைதடி குருசாமி வித்தியாலயம்; திவகக் கோட்டம், நல்லூர் கந்தசாமி கோவில் முன்றல் வனிதா குடியிருப்பு, தம்பாட்டி த. க. பாடசாலை.

### சிரமதானம்

சிரமதான நிகழ்வுகள் நாளை பின்வரும் இடங்களில் இடம்பெறவுள்ளன. கோப்பாய் வட்டம், ஆவரங்கால் கோணேஸ் வீதி திருத்தம், பாரதி ச. ச. நி. அங்கத்தவர்கள்; உடுவில்/தெல்லிப்பளை வட்டம் ஏழாலை மயானம் துப்புரவு, ச.ச. நிர்வாகிகள். யாழ் வட்டம் மடம் வீதி கழிவு நீர் வாய்க்கால் குளம் திருத்துதல், நல்லூர் வட்டம் நல்லூர் புதுச்சிவன் கால்வாய் துப்புரவு.

### தாக்குதல்

6-45 மணியளவில் தமது காவல் நிலைகளிலிருந்து சுழிபுரம் சவுக்கடித்துறை திருவடிநிலை கடற் பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி பீரங்கித் தாக்குதலையும், கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டனர்.

இத் தாக்குதல் சம்பவத்தினால் தொடர்ந்து தொழிலினை மேற்கொள்ளமுடியாத நிலையில் மீனவர்கள் தொழில்களை கைவிட்டு கரை சேர்ந்தனர். (41)



## வீரவேங்கை பிருந்தன்

சுந்தரலிங்கம் இந்திரலிங்கம் (சூரி)

(19-09-1991 அன்று மணலாறு மாவட்டத்தில் நடந்த நேரடி மோதலில் வீரச்சாவு அடைந்தார்.)

பிறப்பு: 07-11-1973

வீரச்சாவு: 19 09-1991

எத்தனை பிணம் விழுந்தாலும்
எங்கள் மண்ணை விட்டிடோம்
என்று கொட்டியது உந்தன் பேரிகை
எட்டுத் திசை எங்கும் கொட்டி முழங்குது
நீ சிந்திய ரத்தத் துளிதனில்
ஆயிரம் ஆயிரம் வேங்கைகள் எழுந்து விட்டார்
அவர் வழியினிலே நாம் அனைவரும் எழுந்து விட்டோம்

மற்றும் அந்நாளில் வீரச்சாவை அணைத்துக் கொண்ட அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீர அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

வியாபாரிமூலைச் சந்தி,
பருத்தித்துறை.

-குடும்பத்தினர்

(6055)

## மரண அறிவித்தல்

திருமதி

**சரஸ்வதி கோபாலபிள்ளை**

அல்லைப்பிட்டி தன்னாலையைச் சேர்ந்தவரும் பிரபல வர்த்தகருமான (அக்கரைப் பற்று சண்முகநாதன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்) திரு. இ. ஆ. கோபாலபிள்ளை அவர்களின் பாரியார் திருமதி சரஸ்வதி கோபாலபிள்ளை 18-09-93 சனிக்கிழமை காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-09-93 அன்று பி. ப. 4.00 மணிக்கு நடைபெற்றன.

உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

இ. ஆ. கோபாலபிள்ளை
[கணவர்]

[6052]